சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – அதிக உதவி தேவைப்படும் மாற்றுத் திறனாளிகள் (High Support Need) – 2019–2020-ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட 856 கூடுதல் பயனாளிகள் ஒரு உதவியாளரை வைத்து தங்களை பராமரித்துக் கொள்ள ஏதுவாக மாதாந்திர பராமரிப்பு தொகை ரூ.1000/- உதவித் தொகை வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது

---

மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை

அரசாணை (ப) எண்.36

நாள்: 08.12.2021
பிலவ, கார்த்திகை 22,
திருவள்ளுவர் ஆண்டு, 2052.

படிக்கப்பட்டது :

1. அரசாணை (ப) எண்.27, மாற்றுத்திறனாளிகள் நலத் (மாதிந–2.1) துறை, நாள் 24.10.2019.
2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் கடித எண்.3053/அ.ம.இ.4/2020, நாள் 10.06.2020

******

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அதிக உதவி தேவைப்படும் (High Support Need) மாற்றுத்திறனாளிகள் தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக் கொள்வதற்காக மாதம் ஒன்றிற்கு உதவித்தொகையாக ரூ.1000/- வீதம் 800 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கும் திட்டத்தினை 2019–2020–ஆம் நிதியாண்டு முதல் ஆண்டிற்கு ரூ.96,00,000/- தொடர் செலவினத்தில் செயல்படுத்திட ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், அதிக உதவி தேவைப்படும் (High Support Need) மாற்றுத் திறனாளிகளுக்கு தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக் கொள்வதற்காக மாவட்டங்களிலிருந்து மதிப்பீட்டுக் குழுவின் (Assessment Board for High Support Need) வாயிலாக 2019-2020-ம் நிதியாண்டில் சுமார் 1656 பயனாளிகள் கண்டறியப்பட்டனர் என்றும் இதில், 800 அதிக உதவித்தேவைப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும் உதவித்தொகை வழங்கிட அரசாணை பெறப்பட்டது என்றும், எனவே மாவட்டங்களில் 2019–2020–இல் கண்டறியப்பட்ட மீதமுள்ள அதிக உதவித் தேவைப்படும் 856 (1656-800) மாற்றுத் திறனாளி பயனாளிகளுக்கு 12 மாதங்களுக்கு வழங்க கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ.1,02,72,000-ஐ

(856 X 1000 X 12) திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்து தருமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை ஆய்வு செய்த அரசு அதனை ஏற்கலாம் என முடிவு செய்துள்ளது. அதனடிப்படையில் 2019-2020 ஆம் ஆண்டில் கூடுதலாக கண்டறியப்பட்ட 856 அதிக உதவி தேவைப்படும் பயனாளிகள் தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக் கொள்ள ஏதுவாக மாதமொன்றிற்கு ரூ.1000/- வீதம் உதவித் தொகை வழங்க ஆண்டொன்றிற்கு ரூ. 1,02,72,000/- [ரூ.1000/- x 12 x 856] தொடர் செலவினம் ஏற்படும். மேலும், இத்திட்டத்திற்காக நடப்பாண்டிற்கு செப்டம்பர் 2021 முதல் மார்ச் 2022 வரை (856 பயனாளிகள் x ரூ.1000 x 7 மாதம்) தேவைப்படும் கூடுதல் நிதி ரூ.59,92,000/-ஐ (ரூபாய் ஐம்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்

"2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும் 02 - சமூக நலன் - 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - NI - அதிக உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவியாளர் உதவித் தொகை வழங்குதல் - 309 - உதவித் தொகை - 03 - குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"

(IFHRMS DPC: 2235 02 101 NI 30903)

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத் தொகை ரூ.59,92,000/- 2021-2022-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும் 2021-2022-ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்படும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3-ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் 2021-2022-ம் ஆண்டிறற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி(சந)/வ.செ.பொ-I) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலும் அதிக உதவி தேவைப்படும் மாற்றுத் திறனாளிகள் தங்களுக்கு உதவியாளரை நியமனம் செய்திட இந்நேர்வு தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றுமாறு மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.53879/நிதி(சந)/2021, நாள்.03.12.2021 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 1080 (ஆயிரத்து எண்பது) ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். லால்வேனா,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் (சமூக நலம்/ வ.செ.பொ.II) துறை. சென்னை-9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

08/12/21
பிரிவு அலுவலர்
8-12-21